<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்</u>
<u>அ.வ.எண். 155/2022</u>

பெயர் : கவிதா
சாட்சி – வா.சா–1 நாள்:02.04.2026

---

<u>குறுக்கு விசாரணை (பிரதிவாதி தரப்பு)</u>

1. எனது கணவருக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்த போது பிரதிவாதி தான் அவரை மருத்துவமனைக்கு அழைத்துச்சென்று சிகிச்சையில் சேர்த்தார் என்றால் சரியல்ல. நாங்கள் தான் சிகிச்சை பார்த்தோம். எனது கணவருக்கு தேவையான உணவு, உடை ஆகியவற்றை பிரதிவாதி தான் பார்த்துவந்தார் என்றால் சரியல்ல. எனது கணவர் இறுதிச்சடங்கின் போது அனைத்து செலவுகளையும் பிரதிவாதி தான் கவனித்தார் என்றால் சரியல்ல.

2. எனது கணவருக்கு எழுதப்படிக்க தெரியும் என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ஆவணத்தில் கண்டுள்ள கையெழுத்து எனது கணவருடையது தான் என்றால் எனது கணவர் தான் போட்டாரா என்று எனக்கு தெரியாது. எனக்கு எழுதப்படிக்க தெரியாது. நான் பள்ளிப்படிப்பு படிக்கவில்லை. வா.சா.ஆ.4 ஆவணத்தில் உள்ள கையொப்பம் எனது கணவருடையது என்று எனக்கு நன்கு தெரியும் என்றும், நான் அதனை ஒப்புக்கொண்டால் எனக்கு பாதகமாகும் என்பதால் நான் வேண்டுமென்றே மறுக்கிறேன் என்றால் சரியல்ல.

3. எனது கணவருடைய கையெழுத்தை நான் பார்த்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.4 ஆவணத்தில் உள்ள கையொப்பம் எனது கணவருடையது தான் என்றால் சரிதான். எனது கணவர் நல்ல உடல்நிலை மற்றும் மனநிலையில் தான் வா.சா.ஆ.4 செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதிவைத்துள்ளார் என்றால் சரியல்ல. எனது கணவர் குடிப்பழக்கத்தின் காரணமாகவே வா.சா.ஆ.4 ஆவணத்தை எழுதிவைத்திருப்பார் என்று நான் சொல்வது வழக்கிற்காக சொல்லும் பொய் என்றால் சரியல்ல.

4. 1991ம் ஆண்டு பாகப்பிரிவினையின் படி எனது கணவருக்கு பாத்தியப்பட்ட க.ச.346/4 காலையில் 19 1/4 செண்ட் பூமியும், அதே காலையில் 42 1/4 செண்ட் பூமியும் 3ம் நபர்களுக்கு கிரையம் மூலம் விற்பனை செய்துள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி கிரையத்தின் போது அவருக்கு திருமணமே ஆகவில்லை என்றால் சரியல்ல. எனது கணவர் அவரது திருமணத்திற்கு முன்பும், சில சொத்துக்களை விற்றுள்ளது எனக்கு நன்கு தெரியும் என்றும், தெரிந்தும் நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

5. திருமணத்திற்கு பின்னர் க.ச.345/15 காலையில் உள்ள 5 செண்டில் எனது கணவர் 2 செண்ட் பூமியை அவரது மற்றொரு சகோதரருக்கு செட்டில்மெண்ட் ஆவணமாக எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் ஏமாற்றி வாங்கியுள்ளார்கள். எனது கணவரிடம் ஏமாற்றி வாங்கினார்கள் என்பதற்கு எதிராக சட்டநடவடிக்கை மேற்கொண்டேனா என்றால் இல்லை. உண்மையாகவே நான் சொல்வது போல் ஏமாற்றி வாங்கியிருந்தால் எனது கணவர் மூலமாகவே நான் சட்ட நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றும், எனது கணவர் தெரிந்தே எழுதிக்கொடுத்ததால் தான் நான் எந்த நடவடிக்கையும் எனது கணவர் மூலமாக எடுக்கவில்லை என்றால் சரியல்ல.

6. நான் என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், எனது கணவரிடம் ஏமாற்றி எழுதி வாங்கியுள்ள சொத்தை எனக்கு வேண்டுமென்று தாக்கல் செய்துள்ளேன். எனது கணவரை ஏமாற்றி எழுதி வாங்கியதற்காக காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளேனா என்றால் இல்லை. நான் தற்போது எனது பெற்றோர் வீட்டில் வசித்து வருகிறேன். நான் 7, 8 வருடமாக எனது அம்மா வீட்டில் வசித்து வருகிறேன்.

7. 2015ம் ஆண்டிலிருந்து அம்மாபாளையத்தில் தறிகுடோனில் வேலை செய்கிறேன் என்றால் சரிதான். 2015ம் ஆண்டிலிருந்து எனது கணவரை நான் பிரிந்து வாழ்ந்து வந்தேன் என்றால் சரியல்ல. எனது கணவர் இறப்பதற்கு 7, 8 ஆண்டுகளுக்கு முன்பிலிருந்து நான் அவரை பிரிந்து வாழ்ந்து வந்தேன் என்றால் சரியல்ல. தறிகுடோனில் வேலை செய்யும் போது எனது கணவரின் ஒரு கை துண்டாகிவிட்டது என்றால் சரிதான்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக வழக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

(sd/– V.Kalidasan)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பல்லடம்.